**தலைப்பு 274 – அநுராதபுரம் மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 கணக்காய்வு அபிப்பிராயம்

அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு அந் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியின் அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்வரும் காலத்தில் உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக மிகச்சிறந்த கட்டுப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கையிடுவேன் |

மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் செய்யப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை XLVII ஆம் அத்தியாயத்தின் 13.2 ஆம் பிரிவு | ஆரம்ப பரிசோதனையொன்று எவ்வளவு காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டுமென ஆரம்ப பரிசோதனைக்காக கட்டளையிடும் உத்தியோகத்தரால் பரிசோதனை குழுவிற்கு கூறப்பட வேண்டிய போதும் ஆரம்ப பரிசோதனையொன்றை பூர்த்தி செய்யும் காலத்தினை திட்டவட்டமாக பரிசோதனை சபைக்கு குறிப்பிடாததன் காரணமாக மாவட்ட செயலகத்தினால் கடந்த 6 மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட அவ்வாறான 04 பரிசோதனைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பூர்த்தி செய்யப்படாத புலனாய்வுகளை திட்டவட்டமான திகதியொன்றில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்காலத்தில் ஆரம்ப புலனாய்வுகளை நடாத்தும் போது பூர்த்தி செய்ய வேண்டிய பூர்த்தி செய்ய வேண்டிய திகதிகளை நிர்ணயித்துக்கொள்ளல் வேண்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.6 ஆம் பந்தி | ஏதேனுமொரு பெறுகைக்காக கூறுவிலை கோரப்பட்டு கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் அளவை மிகைத்து கொள்வனவு செய்வதற்கு நேரும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரருக்கு கூறுவிலை சமர்ப்பித்த அளவிலிருந்து 50 சதவீதம் மாத்திரம் கூறுவிலைகளின் கீழ் கொள்வனவு செய்ய முடியும். அதனை மிகைத்து கொள்வனவு செய்ய வேண்டுமாயின் போதியளவு கழிவு பெற்றுக் கொள்ளப்பட்டு கொள்வனவு செய்தல் அல்லது மீண்டும் கூறுவிலை கோரி கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும் முதலாவது கூறுவிலை அனுப்பும் பேதே கிடைத்த விலைகளின் கீழ் கட்டளை பெறுமானத்தில் 50 சதவீதத்தை மிகைத்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை லழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளவாறான கொள்வனவு செய்யப்பட்ட அளவிற்குரிய நிதி விலகல் (அதிகரிப்பு 46 சதவீதம் மாத்திரம்) மீண்டும் கேள்வி கோருவதற்கு போதியளவு காலம் இருக்கவில்லை. |

### 1.6.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் போது மதிப்பீட்டுப் பெறுமதியை மிகைத்து ரூபா 2,478,156 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.13.4 இன் பிரகாரம் விலகலுக்காக மொத்த கிரய மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பீடுகளை மேற்கொள்ளும் போது 10 சதவீத விலகல் ஏற்படக்கூடும் அத்துடன் இம்மதிப்பீட்டின் விலகல் 8.5 சதவீதமாக இருப்பதால் சாதாரண விலகல் எல்லையில் உள்ளது |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உப ஒப்பந்தம் வழங்கப்பட்ட பெறுமதி ரூபா 6,006,157 தொகையான 06 வேலை விடயங்களுக்காக பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | போட்டி விலைகோருவதற்கு போதியளவு காலம் இல்லை என்பதால் வழிகாட்டல்களுக்க புறம்பாக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதும் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நேர்மையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது |
| (இ) | செயற்திட்டத்தற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 122,520 பெறுமதியான மின் உபகரணங்களில் பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது. | பற்றாக்குறை தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிர்மாணம் மேற்கொள்ளப்பட்ட கடற்படையுடன் கலந்துரையாடி பரீட்சித்து அறிக்கையிடுகின்றேன். |
| (ஈ) | தேவைப்பாடு முறையாக இனங்காணப்படாமல் கொள்வனவு செய்யப்படாமையால் நிர்மாண நடவடிக்கைகளின் இறுதியில் சேமிக்கப்பட்ட நிர்மாண பொருட்களன் விலை விபரங்களின் பேரில் ஏலவிற்பனை செய்தமையால் ரூபா 239,714 ஆன நட்டம் இடம் பெற்றிருந்தது. | மூலப்பொருட்கள் கட்டுப்பாடு மற்றும் கொள்வனவு என்பவற்றறிகாக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று பின்பற்றப்பட வேண்டும். | நேரம் மட்டுப்படுத்தப்பட்டமையால் பொருட்களை நூறு சதவீதம் சரியாக மதிப்பீடு செய்ய முடியாமையால் இந்நட்டத்தை தவிர்க்க முடியாது. |
| (உ) | நிர்மாணங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 186,000 பெறுமதியான 51 உபகரணங்கள் மற்றும் கருவிகள் நிர்மாணத்தில் ஈடுபட்ட நிறுவனத்தினால் மீள ஒப்படைக்கப்பட்டிருக்க வில்லை. | மீளப்பெற்ற பொருட் பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டும். | கடற்படையிடமிருந்து மீளப் பொறுப்பேற்கவோ அல்லது அவர்களின் பொருட் பதிவேட்டிலோ உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதிஏற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீண்டெழும் செலவினங்களுக்காக 21 அமைச்சுக்கள், 21 திணைக்களங்கள் மற்றும் 2 அலுவலகங்கள் என்பவற்றால் முறையே ரூபா 5,159 மில்லியன், ரூபா 391 மில்லியன் மற்றும் 366 மில்லியன் என கூட்டு மொத்தமாக ரூபா 5,916 மில்லியன் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் கூட்டுமொத்தமாக ரூபா 4,691 மில்லியன் பயன்படுத்தப் பட்டிருந்ததன் காரணமாக வழங்கப்பட்ட நிதிஏற்பாடுகளில் ரூபா 1,225 மில்லியன் அதாவது 21 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. 06 அமைச்சுகளுக்குரிய மீளாய்வாண்டில் மூலதனச் செலவினத்தினை மேற்கொள்வதற்காக கிடைக்கப் பெற்றிருந்த நிதிஏற்பாடுகளில் 17 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையான நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களில் இருந்து வழங்கப்படும் நிதிஏற்பாட்டை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்த வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்களை அடைந்து கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 04 பிரதேச செயலகங்களினால் ரூபா 53,857,691 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகளின் அடிப்படையில் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த 04 செயற் திட்டங்களின் பௌதீக செயலாற்றல் ரூபா 27,239,894 ஆக அதாவது 51 சதவீதம் அளவான காரணத்தினால் எதிர்பார்க்கப்பட்ட நலன்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. | செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு ஆண்டில் பூர்த்தி செய்வதற்காக செயன்முன்னேற்ற மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்காக பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவித்திருக்க வில்லை |

| நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பிரதேச செயலக பிரிவுகள் | செயற்திட்டம் | மொத்த நிதிஏற்பாடு | 2019.12.31 இல் செலவினம் |
| --- | --- | --- | --- |
| | | ரூபா | ரூபா |
| (அ) கிராம சக்தி வியாபாரம் – பலுகஸ்வெவ | ஆசிரிகம, மஹவெவ புனரமைப்பு | 18,900,435 | 11,622,150 |
| (ஆ) கிராமிய வசதிகள் அபிவிருத்தி செய்யம் நிகழ்ச்சி - கெகிராவ | கனேவல்பொல பாடசாலை சந்தி முதுல் சுற்றுவட்ட வீதி கற்கள் பதித்து புனரமைப்பு | 21,080,713 | 12,115,344 |
| (இ) கிராமிய வசதிகள் அபிவிருத்தி செய்யம் நிகழ்ச்சி – மிஹிந்தலை | ஏ 9 வீதியின் ஜயன்தி சந்தி முதல் கெமுனு வித்தியாலயம் வரை வீதி புனமைப்பு | 12,876,543 | 3,502,400 |
| (அ) கிராம சக்தி வியாபாரம் – 2019 திரப்பனே | படிகெட்டுவ இஸ்மன்னே முதல் பழைய வயல் ஊடாக விவசாய வீதி நிர்மாணம் | 1,000,000 | -- |

| பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- |
| | - மேற்படி - |
| | - மேற்படி - |
| - மேற்படி - | - மேற்படி - |
| - மேற்படி - | - மேற்படி - |
| - மேற்படி - | |
| - மேற்படி - | |

**3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 இன் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மிஹிந்தலை ஜயந்தி சந்தி முதல் கெமுனு வித்தியாலயம் வரையான வீதி புனமைப்பிற்காக ரூபா 8,510,800 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி வரை அவ்வீதியின் இரண்டு பக்க ஓரக்காண் அமைத்தல், ஹியும் குழாய் மதகு ஒன்றினை இடுதல் மற்றும் அஸ்பொலொட் பரப்பி காபட் இடல் போன்ற விடயங்களுக்காக முறையே ரூபா 320,500 தொகை ரூபா 378,900 தொகை ரூபா 4,060,000 என மொத்தம் ரூபா 4,759,400 ஆன நிதிஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருந்த போதும் அவ் வேலைகள் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. | உரிய அமைச்சிடம் இருந்து தொடர் வேலைகளாக அங்கீகரித்துக் கொண்டு துரிதமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டும். | திசெம்பர் மாதத்தில் காணப்பட்ட மழை காரணமாக செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய முடியாமல் இருந்ததுடன் 2020 தொடர் வேலையாக அங்கீகரித்துக் கொள்வதற்காக அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுளள்து. |

**3.3 நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதும் முன்னேற்றத்தைப் பெறாதிருந்த செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, வட மாகாண அபிவிருத்தி இந்து சமய அலுவல்கள் அமைச்சின் கீழ் வடக்கு மற்றும் வடமத்திய மாகாணத்தின் வசிக்கும் கடன் தொல்லையால் பாதிப்புற்ற அநுராதபுரம் மாவட்டத்தில் நுண் நிதிக் கடன் வசதிகளை வழங்குவதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 250 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் | செயற்திட்ட முன்மொழிவுகளில் குறிப்பிடப்பட்ட அளவீடுகள் திருத்தம் செய்யப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களுக்காக கடன் வழங்கும் வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். | செயற்திட்டத்தின் கடன் வழங்கும் நியதிகள் திருத்தம் செய்வதற்காக உரிய அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

அந்நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்காக வட மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திற்கு நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அத்திணைக்களத்தினால் அநுராதபுர மாவட்ட கூட்டுறவுச் வங்கி சங்கத்துடன் உடன்படிக்கைக்கு இணங்கியிருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 6.5 மில்லியன் மாத்திரமே கடன் வழங்கப்பட்டிருந்த மையால் வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளில் ரூபா 243.5 மில்லியன் அதாவது 97.39 சதவீம் குறித்த செயற்திட்டத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை.

## 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தம்புத்தேகம பொருளாதார நிலையத்தின் வேலியை நிர்மாணிப்பதற்கான பெறுகை யின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.2 ஆம் பந்தியின் பிரகாரம் வேலை ஒப்பந்தங்களின் போது பொறியியலாளர் மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்து விரிவான கேள்வி மதிப்பீட்டிற்காக வழங்கப்பட்டிருந்த ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. அதன் பிரகாரம் தகைமையுடைய ஆகக்குறைந்த விலைகளை சமர்ப்பித்த 5 கேள்விதாரர்கள் நிராகரிக்கப்பட்டு 6 ஆவது இடத்தில் கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரருக்கு கேள்வியை அளிப்புச் செய்ததன் காரணமாக ரூபா | பெறுகை வழிகாட்டிக் கோவைகளில் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நட்டத்தை பொறுப்பான தரப்பினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 287,821 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. | | |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் மோட்டார் வண்டிகளை நிறுத்தும் இடத்தை திருத்தியமைப்பதற்காக ரூபா 4,884,950 ஆன பொறியியலாளர் மதிப்பீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பெறுகை செயற்பாட்டின் போது ரூபா 4,640,203 ஆன விலைக்கு கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 28 நிறுவனங்களுக்கு கூறுவிலை அழைப்பு பதிவுத் தபால் மூலம் அனுப்பியிருந்த போதும் அப்பெறுகை செயற்பாட்டின் போது கேள்விதாரருக்கு ஒப்பந்தம் தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு போதியளவில் தகவல்கள் வழங்காமை மற்றும் அந்த அழைப்பு கடிதங்கள் கிடைக்காமை காரணமாக இரண்டு பேர் மாத்திரம் கூறுவிலைகளைச் சமர்ப்பித்திருந்தனர். கேள்வி அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்ட 8 பேருக்கு சீ 7 அல்லது 8 உடன் இக்டாட் பதிவு இல்லாமல் இருந்ததுடன் மூன்று கேள்விதாரருக்கு கடிதங்கள் அனுப்பிய முகவரிகள் வேறுபட்டிருந்தன. அவ்வாறே 03 கேள்விதாரர்களுக்கு பதிவுத் தபால் கிடைக்கவில்லையென கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இப்பெறுகை செயற்பாடு முறையான போட்டி விலை பெற்றுக் கொள்ளப்படாமல் மதிப்பீட்டு விலையில் 95 சதவீதத்திற்கு வழங்கியிருந்த ஒப்பந்த மொன்றாக அவதானிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்ப வேண்டும். | 28 நிறுவனங்களுக்கு அழைப்பு பதிவுத்தபால் மூலம் அனுப்பியிருந்தமை, அக்கடிதங்கள் மீளக் கிடைக்காமை மற்றும் போதியளவு காலம் வழங்கியமை ஆகிய காரணங்களால் இப் பெறுகைக்காக போதியளவு போட்டியொன்று இருந்ததாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு மற்றும் பெறுகைக்குழு திருப்தியடைந்துள்ளது. |

| | | |
|---|---|---|
| (இ) கம்பெரலிய துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக சின்க் அலுமினியம் கூரைத் தகடுகளை கொள்வனவு செய்வதற்காக இடம்பெற்ற பெறுகை செயற்பாட்டின் போது தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் தகைமையுடைய குறைந்த கேள்விதாரரிடம் இருந்து கொள்வனவை மேற்கொள்ளாமல் கூடிய விலைகளின் கீழ் கூரைத் தகடுகளை கொள்வனவு செய்தமை காரணமாக ரூபா 1,120,303 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது. | பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மஹகல்கடவெல ஹாட்வெயார் நிறுவனத்தின் துணைக் கம்பனியான BMC நிறுவனத்திற்கு 10 அனுபவம் ஆண்டுகள் இல்லாமையால் குறைந்த விலைகளைச் சமர்ப்பித்த கூறுவிலை நிராகரிக்கப்பட்டது. |

**3.5 நட்டங்களும் சேதங்களும்**

.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப் பட்டிருந்த புத்தகங்களிலிருந்து பதிவழிப்புக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பு ii மாதிரியின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டிற்கான காலப்பகுதியில் 16 வாகனங்களுக்கு இடம்பெற்ற ரூபா 2,459,248 தொகையான நட்டத்திலிருந்து ரூபா 2,334,643 தொகை அறவிடப்பட்டிருந்த போதும் இதுவரை அதற்குரிய பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்பட்டு நட்டங்களும் சேதங்களும் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட வில்லை. |

**3.6 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பெரலிய துரித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மைத்திரிபால சேனாநாயக்க வீதி முதல் கூம்பிச்சன்குளம் வரையான வீதி அச்சுக்கள் பதித்து அபிவிருத்தி செய்யும் பொறியியலாளர் மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவினை குறைவாக நிறைவேற்றப் பட்டிருக்கையில் ரூபா 41,584 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கூடுதலான கொடுப்பனவுகள் இருந்தால் அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | கொடுப்பனவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மீண்டும் பரீட்சித்து பார்த்து சரியான அளவீட்டின் பிரகாரம் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | பதவிய பிரதேச செயலகப் பிரிவின் 2 கிராம சேவையாளர் பிரிவுகளில் அனுமதிப்பத்திர காணிகளில் அரசின் கட்டணங்களைச் செலுத்தாமல் சரவைக் கற்களை அகற்றியமைக்காக 694 கியுப்களுக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 129,968 தொகையான அரச கட்டணங்கள் அறவிடப்பட்டி ருக்கவில்லை. | அனுமதியின்றி சரவைக் கற்களை அகற்றியதற்காக பரீட்சித்து அக்கட்டணங்கள அறவிடப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கவில்லை |
| (இ) | சரவைக் கற்கள் அகழும் போது நிலத்தை பனுரமைப்பதற்காக வைப்பாக 1 கியுப் சரவைக் கற்களுக்காக ரூபா 200 வீதம் வைப்புத்தொகையொன்று பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் 13 பிரதேச செயலகங்களில் 25 சந்தர்ப்பங்களில் நிறுத்தி வைக்க வேண்டிய ரூபா 5,575,600 வைப்புத் தொகையை தொகை நிறுத்தி வைக்கப்படாமை காரணமாக உரிய இடங்களின் சுற்றாடலை உரிய நிலைமைக்கு கொண்டு வரல் சரியாக இடம்பெறவில்லை. | குறித்த அகழ்வாளர் அச்செயற்பாட்டை நிறைவேற்றாவிட்டால் அவ்வைப்புத் தொகையிலிருந்து அதனை நிறைவேற்ற வேண்டியதுடன் அவ்வாறு செய்யப்படாத தரப்பினர் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மாவட்டத்தின் 20 பிரதேச செயலகங்களில் செயற் படுத்தப்பட்டிருந்த இலங்கை மகளிர் பணியகத்தின் கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 15,816,936 ஆக இருந்தது. இக்கடன்தொகையில் 06 மாதங்களுக்கு 1 வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் தாமதித்திருந்த ரூபா 415,588 கடனும் 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலம் தாமதமான கடன் மீதி ரூபா 5,749,170 ஆக இருந்தது. | சுழற்சிக் கடன் முறைமையை தொடர்ச்சியாக செயற்படுத்துவதற்காக கடன் அறவீட்டை நாளதுவரையாக்க வேண்டும். | அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | சமய நிலையங்களுக்கு சூரியசக்தி முறைமைகளை வழங்கி பொருத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட பெறுகை செயற்பாட்டின் போது கூறுவிலை ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட தகைமையுடைய கேள்விதாரர் இணங்கிய சூரியசக்தி முறைமையின் Photovoltaic பகுதிக்காக 10 ஆண்டுகளும் Solar PV Module இற்காக 25 ஆண்டுகளும் Wring and Cabling இற்காக 20 ஆண்டுகள் உத்தரவாதகாலம் வழங்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 6,225,000 பெறுமதியான 15 சூரியசக்தி முறைமைகளுக்காக மேற்குறித்த உத்தரவாத காலம் வழங்கப்பட்ட மைக்கான சான்றுகள் காணப்படவில்லை. | குறித்த உத்தரவாத சான்றிதழை நலனாலிகளுக்கு வழங்க வேண்டும். | எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | அநுராதபுரம் மாவட்டத்தில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் சட்டரீதியான அனுமதிப்பத்திரமொன்று பெற்றுகொள்ளாமல் பெற்றுக் கொண்ட அனுமதிபத்திர மொன்றை முறையற்றதாக பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட சரவை கல் அகழ்வில் இருந்து அரசிற்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 42.9 மில்லியனாக இருந்தது. | புவிச்சரிதவியல் மற்றும் சுரங்க பணியகத்துடன் இணைந்து பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மாவட்ட செயலகத்தினதும் பிரதேச செயலகங்களினதும் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,810,546 ஆக இருந்ததுடன் அக்கடன் மீதிகளில் ரூபா 928,421 தொகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்டதாக இருந்தது. | கடன்பட்டோருடன் உள்ள உடன்படிக்கையின் பிரகாரம் உரிய கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன் மீதிகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 5. நல்லாளுகை

### 5.1 பொதுமக்களுக்கு சேவைகளை நிறைவேற்றல்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| அரசாங்க காணி கட்டளைகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வதிவிட மற்றும் விவசாய செயற்பாடுகளுக்காக மதிப்பீட்டு பெறுமதி அறவிடப்பட்டு நீண்டகால அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டிய 2 காணித் துண்டுகளை, கிழக்கு நுவரகம்பலாத பிரதேச செயலக பிரிவின் 279 ஆம் இலக்க மஹகலன்வெவ கிராம சேவையாளர் பிரிவின் இரண்டு நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இந்த அனுமதிப்பத்திரங்கள் காணி கட்டளைகள் சட்டத்தின் 19(2) ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த வருமானம் ரூபா 144,000 இற்கு குறைந்த 2 விடுதலை அனுமதிப்த்திரங்கள் என மேலும் அவதானிக்கப்பட்டது. | மதிபீட்டுப் பெறுமதி அறவிடப்பட்டு நீண்டகால அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். | காணி ஆணையாளர் நாயகத்தின் ஆலோசணைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |